Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC. 492/2025** |
| Deposition of witness for | :: | PW. 3 |
| Name | :: | **சுரேஷ்குமார்**<br>**(சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the

day of 2026

---

எதிரி ஆஜர் எதிரி வழக்கறிஞர் ஆஜர்.

**10.06.2026.**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரரும் சமாதானமாக செல்வதாக மனு தாக்கல் செய்துள்ளதாலும் சம்பவ சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு

ஜோதிமுத்து தற்சமயம் மத்திய நுண்ணறிவு பிரிவு மதுரை மண்டலத்தில் பணி செய்துவருவதாலும், அவரது கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பங்கள் எனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், வழக்கு கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 21.05.2025 ம் தேதி இரவு 7.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருக்கும்போது அருப்புக்கோட்டை பஜனை மடம் தெருவை சார்ந்த ஆனந்தராஜ் என்பவர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 195/2025 பிரிவுகள் 296(b),126(2),115(2) BNS ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார்.**(முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகார் மனுவை இணைத்து கனம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

3. பின்னர் அன்றையதினமே இரவு 7.45 மணிக்கு சம்பவ இடமான அருப்புக்கோட்டை புளியம்பட்டி எஸ்பிஐ எடிஎம் அருகில் சென்று சாட்சிகள் செல்வராஜ், அலெக்ஸாண்டர் ஆகியோர்கள் முன்னிலையில் தெருவிளக்கு மற்றும் டார்ச்லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பார்வை மகசர் அசாஆ 3 ஆகவும், மாதிரி வரைபடம் அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் புகார்தாரர் ஆனந்தராஜ் சாட்சிகள் அன்பழகன், தவசி ஆனந்தம், நல்லதம்பி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான செல்வராஜ், அலெக்ஸாண்டர் ஆகியோர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் 22.05.2025 ம் தேதி அருப்புக்கோட்டை ரஸ்தா தெருவில் உள்ள இவ்வழக்கின் எதிரியான நரேந்திரன் என்பவரை காலை 11.15 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்து குற்றமானது பிணையில்விடும் குற்றம் என்பதால் தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார்.

6. 02.06.2025 ம் தேதி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட ஆனந்தராஜ் மற்றும் தவசி ஆனந்தம்

ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் பிரவீன் அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(ஆனந்தராஜ் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ 5 ஆகவும் தவசி ஆனந்தம் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

7. பின்னர் அன்றையதினமே இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக பிரிவுகள் 296(b),126(2).115(2) BNS ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் சார்பு ஆய்வாளர் அவர்கள் புகார்மனுவை பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை